புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மீராவின் கவிதைகளில் உவமையும் உருவகமும்

சி.பிரதீமா
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் 637 401.

முனைவர் இரா.கலைச்செல்வி
நெறியாளர், இணைப்பேராசிரியர் &
துறைத்தலைவர்
தமிழாய்வுத்துறை இராசிபுரம் 637 401.
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,

ஆய்வுச்சுருக்கம்

கவிஞர்களின் மரபுக்கவிதைகள் உவமைகள் உருவகங்கள் ஆகியவற்றை மிகுதியாகத் தாங்கி நிற்கின்றன. உவமைகள் கவிதையை அழகாக்குவது மட்டுமின்றி வாசிப்போரின் மனங்களை ஈர்க்கவும் வல்லது. கவிஞர்கள் பயன்படுத்தும் வருணனைகள் பெரும்பாலானவை இயற்கையைச் சார்ந்தே அமைகின்றன. அந்தவகையில் மீரா தன் வாழ்க்கையில் உணர்ந்த, அவர் இரசித்த காட்சிகளையே பெரும்பாலும் உவமையாகக் கையாண்டுள்ளார். உவமைகளை அவர் காட்சிப்படுத்தும் விதமானது கவிதையை மேலும் மெருகூட்டுவதற்காவும், வாசிப்போரை மீண்டும் வாசிக்கத் தூண்டுவதற்காகவும் அமைகிறது.

பெரும்பாலும் கவிஞர் மீரா, தனது கவிதைகளில் உவமைகளையும், உருவகங்களையும் அழகாகக் கையாண்டுள்ளார். தமிழின் இனிமை, நிலவின் அழகு, பெண்ணின் அழகு, காதலின் பிரிவு, காதலின் இனிமை, இரவின் அழகு ஆகியவற்றை உவமை மற்றும் உருவகத்தின்வழி எவ்விதம் பதிவு செய்துள்ளார் என்பதைப் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

## ஆய்வு நெறிமுறைகள்

மீராவின் கவிதைகளை உவமை சார்ந்தவை. உருவகம் சார்ந்தவை எனப் பகுத்துக் கூறியுள்ளமையால் பகுப்புமுறைத் திறனாய்வும், இயற்கை வருணனைகளில் உவமைப் பற்றிக் கூறியுள்ளமையால் அழகியல் முறைத் திறனாய்வும் கையாளப்பட்டுள்ளன.

## முன்னுரை

கவிதையிலே, சாதாரண சொற்கள் அசாதாரண சொற்களைப் பெற்று விளங்குகின்றன. அவ்வாறாயின் அதுசாத்தியமாவதற்குச் சில உத்திகள் அவசியமாக தேவைப்படுகின்றது. கவிஞன் கையாளும் இவ்வுத்திகளுள் ஒன்று உவமை. உவமை என்பது ஒரு பொருளைப் பிறிதொரு பொருளுக்கு ஒப்பிட்டுக் கூறுவதாகும். அதாவது இரு வேறுபட்ட பொருட்களை ஒப்புநோக்குவது. இதனால், சம்பந்தப்பட்ட சொற்களின் பொருளாற்றலை மிகைப்படுத்துகிறான் கவிஞன். உவமையும் உருவகமும் ஒரே அடிப்படையிலிருந்து தோன்றியவை. இவ்வாறான உவமையும் உருவகமும் கவிஞர் மீராவின் கவிதைகளில் எவ்விதத்தில் இடம்பெற்றிருக்கின்றன என்பதை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## மீராவின் குறிப்புகள்

தமிழ்க் கவிஞர்களுள் பாரதியைப் போல் சமூகப் போராளிகளாகவும் திகழ்ந்தவர்கள் மிகச் சிலரே. அவர்களுள் ஒருவர் கவிஞர் மீரா. மரபிலும் வசனக் கவிதையிலும், புதுக்கவிதையிலும் சாதனைகள் செய்தவர். தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகங்கையில் 10.10.1938இல் பிறந்தவர். பெற்றோர் மீனாட்சிசுந்தரம் இலட்சுமி அம்மாள். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ் இலக்கிய முதுகலைப்பட்டம் பெற்றவர். 1962 முதல்

சிவகங்கை மன்னர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியைத் தொடங்கி முதல்வர் பொறுப்பு வரை உயர்ந்து ஓய்வு பெற்றார்.

மீரா பலரை உருவாக்கியவர். அம்முயற்சியில் தன்னை உருவாக்கிக்கொள்ள மறந்தவர். மீராவின் மரபு பாடல்களில் பல சந்தம் தழுவியவை. எண்சீர் விருத்தியில் இவர் பல வடிவமைப்புச் சோதனைகளைச் செய்துள்ளார். இவரது கவிதைகளில் சங்க இலக்கிய மணமுண்டு. பாரதியின் தாக்கமுண்டு. பாரதிதாசனின் பரம்பரை முத்திரையும் உண்டு. சந்த இனிமைக்கும் பா நடைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக மீராவின் பல பாக்கள் கலைஞர்களின் உள்ளத்தைத் தொடத்தக்கன. அறம் காத்திருந்து பார்ப்பதுபோல இவரது கவிதைகளும் காலம் கடந்தாலும் மக்களால் கண்டு கொள்ளப்படும் என்பது உறுதி.

இவரது கவிதைகள் வருணனைகள் நிறைந்தவை. வருணனைகளோடு வருவதால் உவமையும் உருவகமும் மிகுதியாகவே மீராவின் படைப்புகளில் இடம்பெற்றிருக்கின்றன.

உவமை – வகையும் இலக்கணமும்

தமிழ் இலக்கணங்களில் உவமையும் உருவகமும் ஒரே அடிப்படையிலிருந்து தோன்றுவன. பழைய இலக்கண ஆசிரியர்கள் உவமையை அணி என்றும் அழைப்பர். உவமையணி கவிதையில் மட்டுமின்றி மக்களின் அன்றாட உரையாடலிலும் விரவி வரும். சாதாரணமாக மொழியிலே பரந்து காணப்படும் எத்தனையோ உவமைகளை நாம் கவனித்துப் பார்ப்பதில்லை. பேச்சோடு பேச்சில் அவை அமிழ்ந்து விடுகின்றன. அடிக்கடி பேச்சில் அடிப்பட்டு அவற்றின் சக்தி குன்றிவிட்டது எனலாம். ஆயினும் அவையும் உவமைதான் என்கின்றனர் ஆய்வாளர்கள். உதாரணமாக,

> “வெயில் நெருப்பாய் எரிக்கிறது
> பொம்மை மாதிரி இருக்கிறார்”

மைதானத்தில் சனம் வெள்ளமாய்க் கிடந்தது. இவை போன்றவை நாம் அடிக்கடி கேள்விப்படுபவை. ஆனால், கவிஞனோ இத்தகைய உவமையை புதுப்புது வகைகளில் பயன்படுத்தித் தனது எண்ணங்களையும் வருணனைகளையும் அகலமாகவும் ஆழமாகவும் செய்து கொள்கிறான். இதுகொண்டே உவமங்களிலே புலவனுடைய விரிந்த புலமையாற்றல் வெளிப்படும் என்பர் அறிஞர். உலக நிகழ்ச்சிகளை எத்துணைக் கூர்ந்து நோக்கியுள்ளான் என்பதைப் புலப்படுத்தும் விதத்தால், உவமை அவனது புலமையையும் காட்டுகிறது.

இருவகை உவமம்

தொல்காப்பியர் உவமை அணியை அடிப்படை அணியாகக்கொண்டு அதனை இரண்டு வகையாகப் பாகுபடுத்துகிறார். அவை,

1. உள்ளுறை உவமம்
2. ஏனை உவமம்

என்பனவாகும். இதனைத் தொல்காப்பியர் தனது நூலில்,

> “உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
> தள்ளாதாகும் திணையுணர் வகையே”[1]

என்ற நூற்பாவின்வழி பதிவு செய்கிறார்.

உள்ளுறை உவமம்

ஒரு பாடலில் வெளிப்படையாகத் தோன்றும் உவமைக்கும் வேறு ஒரு பொருளை உள்ளுறுத்துச் சொல்லப்படுவது உள்ளுறை உவமம் ஆகும். இது இதனோடு ஒத்துப் பொருள் முடிகென புலவனால் கருதிக் கூறப்படும். இதனைத் தொல்காப்பியர்,

> “உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
> உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்”[2]

என்ற நூற்பாவில் விளக்குகிறார். உள்ளுறை உவமம் பிறிதுபொருள் தந்தே வரும். வெளிப்படையாகச் சொல்லப்படும் ஒவ்வொரு உவமைக்கும் இதில் உட்பொருள் இருக்கும். உவமையும் பொருளும் வேறு என்று பிரித்தறியப்படாமல் உவமையே பொருளெனத்

தோன்றும்படி தொன்றுதொட்டுக் கூறி வருகின்ற மரபில் இது கூறப்படும். கூறுவோன் தெளிவோடு கூறினால் பயில்வோரும் தெளிவோடு உய்த்துணருவர்.

ஏனை உவமம்

உள்ளுறுத்துக் கூறாமல் வெளிப்படையாக உவமையைக் கூறுவது ஏனை உவமம் என்றும் வெளிப்படை உவமம் என்றும் அழைக்கப்படுகிறது. இதனை தொல்காப்பியர்,

"ஏனை உவமம் தான் உணர வகைத்தே"[3]

என்ற நூற்பாவில் பதிவு செய்கிறார். உவமையாகக் கூறப்படும் பொருள் உயர்ந்ததாக இருக்க வேண்டும் எனத் தொல்காப்பியர் தனது இலக்கண நூலில் பதிவு செய்துள்ளார்.

மேலும், ஒரு பொருளின் சிறப்பு, அதன் நலன், அதன்மேல் கொண்டுள்ள பேரன்பு, அதன் வலிமை, இவைகள் உவமை தோன்றும் நிலைக்களனாக அமையும். எடுத்துக்கொள்ளுகின்ற பொருள் தாழ்ந்ததாக இருந்தாலும் அதனையும் சேர்ந்து ஐந்தாக கொள்ளலாம். உவமத்தைச் சுட்டிக் கூறவில்லை எனில் பொருள்களைப் புணர்த்திக் கொள்ளலாம் என்று உவமைக்கான இலக்கணத்தை ஆசிரியர் கூறிச் செல்கிறார். இதனை அடிப்படையாகக் கொண்டு மீராவும் தனது கவிதைகளில் உவமைகளைக் கையாண்டுள்ளார்.

தமிழின் இனிமை

தமிழின் இனிமையை உலகறியச் செய்ய விரும்பிய கவிஞர்,

"திங்கள் முக மங்கை விரல்
தீண்டித்தரும் இனிமை
தெங்கின்குலை இளநீர்ச் சுவை
தேக்கித் தரும் இனிமை
செங்கள்தரும் இனிமை நறுந்
தேமா தரும் இனிமை
எங்கள் தமி ழினிமைக் கொரு
இணையாய் வரு மாமோ"[4]

என்று தமிழின் இனிமையை பறைசாற்றுகிறார்.

நிலவினைப் போன்று முகமுடைய பெண்ணின் கைவிரல் தீண்டும் இனிமையைக் காட்டிலும், இளநீரின் சுவையைக் காட்டிலும், கள் தரும் இனிமையைக் காட்டிலும் தமிழின் இனிமையே உயர்வானது என்று கூறுகிறார். இக்கவிதையில் பெண்ணின் முக அழகுக்கு நிலவை உவமையாக்கிக் கூறி தனது கவிதையில் உவமையைப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

அந்தியின் அழகு

அந்தியின் அழகினை வருணிக்கும் கவிஞர்,

"அடிவானம் சிரிக்கிறது! மோதி மோதி
ஆயிரமாயிரமான வாள்முழக்கம்
முடிவான பெருங்கலிங்கப் போர்க்களத்தின்
முகமாகச் சிவக்கிறது! மினுக்கும் வைரப்
பொடியான விண்மீன் ஒவ்வொன்றாய்த் தோன்றிப்
புன்னகையை விரிக்கிறது! யானைக் கொம்பு
வடிவான பிறைத்திங்கள் மேகம் கீறி
வருகிறது! வளர்கிறது வாழ்க அந்தி"[5]

என்று வருணிக்கிறார். இதில் சிவந்த அடிவானத்தை வருணிக்கும் கவிஞர், கலிங்கப் போர்க்களம் போர்நிறைவில் குருதிபடிந்து சிவந்த நிறத்தில் காட்சியளிப்பதைப் போல, மாலைநேர வானம் சிவந்த வண்ணத்தில் காட்சியளிக்கிறது எனவும், மேகத்தினிடையே ஊடுருவி வரும் பிறைநிலவினை யானையின் தந்தத்திற்கு உவமையாகவும் கூறியுள்ளது கவிஞரின் வருணனைத் திறனையும் இயற்கையின் அழகை இரசிக்கும் பாங்கினையும் காட்டுகிறது.

*வண்ண நிலவின் வருகை*

*நிலவு சிரிப்பதைப் போன்று கற்பனை செய்த கவிஞர், சிரிப்பதற்கான காரணத்தையும் கூறிச் செல்கிறார்.*

*“என்ன நிலவே, எதற்குச் சிரிக்கிறாய்?*
*திரைப்பட நடிகையைத் தெருவில் பார்த்ததும்*
*முந்தியடித்து மொய்த்துக் கொள்ளும்*
*விசிறிகள் போல விண்மீன் கூட்டம்*
*உன்னைப் பார்த்ததும் ஓடோடி வந்து*
*கண்ணடிப்பதனைக் கண்டா சிரிக்கிறாய்?”*[6]

*நிலவினை சுற்றி நட்சத்திரம் பூத்திருக்கும் அழகை, வருணிக்க எண்ணிய கவிஞர், நட்சத்திரத்தை, திரைப்பட நடிகையை கண்டவுடன் மக்கள் கூட்டம் நடிகையைச் சுற்றி எப்படி மொய்த்துக் கொள்ளுமோ! அதுபோல நிலவினைச் சுற்றி நட்சத்திரங்கள் மொய்த்துக் காணப்படுகின்றன என்று நட்சத்திரத்தை மக்கள் கூட்டமாகவும், நிலவினை திரைப்பட நடிகையாகவும் உருவகம் செய்துகாட்டுகிறார் கவிஞர்.*

*பெண்ணழகின் வருணனை*

*தன் வருங்கால காதலியின் வருகையை எதிர்ப்பார்த்துக் காத்திருக்கும் ஒரு காதலனின் இடத்தில் தன்னை வைத்து கவிஞர் அவளின் அழகை பின்வருமாறு வருணிக்கிறார்.*

*“புன்னை மரத்தில் பொன்போல் மின்னும்*
*பூவாய் இருப்பவளோ?*
*தித்திப்புத் தரும் கோவைப் பழம்போல்*
*சிவப்பாய் இருப்பவளோ?*
*சிந்தை கவரும் மல்லபுரத்துச்*
*சிலையாய் இருப்பவளோ?*
*கார்காலத்தின் நீர்மேகம் போல்*
*கறுப்பாய் இருப்பவளோ?”*[7]

*என்று தன் காதலியை, புன்னை மரத்தின் வெண்ணிற பூக்களாகவும், கொவ்வைப் பழம் போன்ற சிவந்த நிறமாகவும், மாமல்லபுரத்து சிலையாகவும், கார்காலத்தின் கரிய மேகமாகவும் உவமைப்படுத்திக் கூறுகிறார். இதுபோன்ற உவமை கவிதையின் அழகை மேம்படுத்திக் காட்டுவது மட்டுமின்றி, உவமையாகக் கூறப்படும் ஒவ்வொரு காட்சிகளையும் நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துவதாகவும் அமைகிறது.*

*பிரிவின் துயரம்*

*தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி ஒருத்தி தன் தலைவனின் பிரிவால் படும்பாட்டை கவிதை மொழிகளால் கூற விழைந்த கவிஞர், உவமைகள் பலவற்றை உள்நிறுத்தி தலைவியின் ஏக்கத்தை வெளிக்கொணர்கிறார்.*

*“கற்கோட்டை போல் இருந்தேன் உங்கள் போக்கால்*
*களிமண்ணாய்க் கரைகின்றேன்! தஞ்சைச் சீமை*
*நெற்காட்டைப் போல் இருந்தேன் பிரிவால் பாலை*
*நிலம்போலக் காய்கின்றேன்! தமிழின் வெல்லச்*
*சொற்பாட்டை எடுத்துத்தான் படித்தால் கூடச்*
*சுவை உண்டா? சுகம் உண்டா? ஏழு வண்ண*
*விற்போட்ட வானத்தின் அழகைக்கூட*
*வெறுக்கின்றேன்”*[8]

*இக்கவிதை வரிகளில் கவிஞர், தலைவியின் மனதை கற்கோட்டையாகவும், களிமண்ணாகவும், நெற்காடாகவும், பாலை நிலமாகவும் உவமைப்படுத்திக் காட்டுவது, தலைவியின் பிரிவின் வலியை உணர வைப்பதாக உள்ளது.*

*தலைவனைத் தேடும் தலைவி*

*தன்னைப் பின்தொடர்ந்து வந்து தன் மனதை கொள்ளையடித்த தலைவனைக் காணாது தவிக்கும் தலைவியின் காதல் நிலையை கவிஞர் பின்வருமாறு எடுத்தியம்புகிறார்.*

"குளிரோடை விழியாலே பார்த்தான் கள்வன்!
குருதியெலாம் கொதிப்பேற ஆடிமாத
வளியாக ஆனேன் நான் அவனோ என்னை
வட்டமிடும் பட்டமென வளைந்து வந்தான்"[9]

இக்கவிதை வரிகள் தலைவனின் விழிகளை குளிரோடையாகவும், அவனது பார்வையால் தலைவி காற்றினைப் போல் ஆன தலைவிக்காக தலைவன் காற்றில் பறக்கும் பட்டம் போல் ஆனான் என்றும் கூறுகின்றது.

தலைவன் மீது காதலுற்ற தலைவி தலைவனுக்காக கலைமகள் போல் காத்திருப்பதாகவும், அவனோ தலைவியை கற்சிலை போல் நினைத்து அவளைக் காண வாராதிருப்பதையும் கவிஞர்,

"நிலவொளியைப் புன்னகையில் நிறுத்தும் அன்பன்
நெடுந்தோளில் சாய்ந்தின்பக் கவிதைப் பாடக்
கலைமகளாய்க் காத்துள்ளேன், அவனின்று என்னைக்
கற்சிலையாய் நினைத்தானோ? எங்கே சென்றான்?"[10]

உவமைகள் கவிதையின் அழகை உயர்த்தியும், செம்மையுறவும் காட்டும் என்பதை கவிஞர் தன் கவிதையின் வழி நிறுவுகிறார். தலைவியினைக் காற்றாகவும், விளக்காகவும், கலைமகள், கற்சிலையாகவும் காட்டி, தலைவனை அதனுடன் தொடர்புடைய குளிரோடையாகவும், பட்டமாகவும் விட்டில் பூச்சியாகவும் உவமைப்படுத்திக் காட்டியிருப்பது கவிதையை மேலும் அழகாக்கிக் காட்டுகிறது.

பெண்ணின் அழகு

பெண்களின் அழகை வருணிக்கும் கவிஞர்,

"கீற்றுமதி போல் நுதலும் மீன்போல் கண்ணும்
கிளிமொழியும், அன்னநடையும் கொண்ட பெண்கள்"[11]

என்று வருணிக்கிறார். இக்கவிதை, பெண்ணின் நெற்றி மூன்றாம் பிறையின்போது தோற்றம் காட்டும் நிலவினைப் போன்றுள்ளது என்றும், அவளின் கண்கள் மீனினை போன்றுள்ளது என்றும், அவளின் மொழி கிளியினது மொழியினைப் போல இனிமையாக உள்ளதென்றும், அவளின் நடை அன்னப்பறவையினுடைய நடையினைப் போன்று அசைந்தாடும் அழகினையுடையது என்று பெண்ணின் அழகினை வருணித்து உவமையோடு கூடி அமைகிறது.

இதேபோல் தலைவியின் வருகைக்காகக் காத்திருக்கும் தலைவன் தன் காதலியைப் பின்வருமாறு வருணிக்கிறான்.

"கண்செய்த நன்மையினால் கண்டேன், என்றன்
காதென்ன தீமைசெய் ததுவோ, நல்லாள்
பண்மொழியை ஒரு சிறிதும் கேட்கவில்லை!
பஞ்சணைத் தோள் தாங்கிக்கை சுவைக்கவில்லை
வெண்மதிய வதனத்தை வருடிப் பார்க்க
விரல்களுக்கும் கொடுத்து வைக்கவில்லை!
தண்ணீர்மீன் போல் இருந்த என்னை இன்று
தவிக்கவிட்டுப் போய்விட்டாள் தரைமீன் போல"[12]

என்று தலைவியை வருணிக்கும் தலைவன், எனது கண் செய்த நன்மையினால் நான் அவளைக் கண்டேன். ஆனால் என் காது என்ன தீங்கு செய்ததோ? அவளுடைய இசை போன்ற மொழியினை கேட்க முடியவில்லை. வெண்மதியினை போன்ற அவளது அழகினை வருடி பார்க்கும் வாய்ப்பு என் விரல்களுக்குக் கிடைக்கவில்லை. தண்ணீரில் வாழும் மீனினை போன்று இருந்தவனை தலையில் வாழும் மீனைப் போல தவிக்கவிட்டாள் என்று தன் நிலையைத் தலைவன் வெளிப்படுத்திகிறான்.

இதில் கவிஞர் தலைவியின் அழகுக்கு இசையினையும், பஞ்சணையினையும், வெண்மதியையும், உவமையாகக் கூறியுள்ளார். இத்தகு அழகு வாய்ந்த பொண்ணால் தண்ணீரில் வாழும் மீன்போல் இருந்தவன் தரையில் வாழும் மீன்போல் ஆனான் என்று தலைவனுக்கும் உவமையைக் கூறியுள்ளார்.

*இலட்சியத்தின் வளர்ச்சி*

*மனிதாய் பிறந்த ஒவ்வொருக்கும் இலட்சியம் என்பது உண்டு. அவ்வாறான இலட்சியத்தை அடையவிடாமல் தடுக்கும் உயர்பெரும் செல்வர்களைச் சாடி அமைந்த கவிஞரின் கவிதையில் உவமையும் இடம் பெற்றிருக்கிறது.*

*"பயிரிடைக் களைபோல் மணியிடைப் பதர்போல்*
*உயரிய இலக்கியத் துள்ளே திணித்த*
*இடைச் செருகல் போல் இங்கே உளசில*
*கடையரும் புலையரும் கயவரும் கூடி*
*நாட்டை விற்கக் கூடும்,*
*மூட்டை சுமக்க முதுகைத் தரட்டும்*
*பந்தைப் போல் கால்மிதி படட்டும் எனினும்*
*மெய்ம்மை விரல் வெளிப்படும்! நிலையாய்க்*
*கார்காலத்தின் காளாண் இருக்குமோ?*
*நீர்மேகத்தின் மின்னல் நிற்குமா?*
*ஒரு நாள்,*
*திருவிழா முடிந்து வெறுங்களம் ஆவார்"*[13]

*செல்வத்தை மட்டுமே சுரண்டி வாழும் உயர்பெரும் செல்வர்கள் ஏழைகளின் இலட்சியத்தையும் அவர்களின் ஆசைகளையும் அடைய எதிர் நிற்பவர்கள். அவர்கள், எப்படிப்பட்டவரெனில், நன்கு வளர்ந்த பயிரிடையே வளர்ந்து காணப்படும் தேவையற்ற களையைப் போன்றவர்கள். நெல்மணியிலிருந்து நீக்கப்பட்ட பதரினைப் போன்றவர்கள். உரிய செல்விலக்கியத்தின் உள்ளே இடையே மிகையாக சேர்க்கப்பட்ட இடைச்செருகலைப் போன்றவர்கள். அவர்களின் நிலை, கார்காலத்தில் முளைக்கும் காளான்களைப் போலவும் நீர்மேகத்தின் மேல் உண்டாகும் மின்னலைப் போலவும் நிலையற்றதாய் போய்விடும் என்று கவிஞர் இக்கவிதையில் கூறுகிறார்.*

*இரவின் வருணனை*

*இரவின் அழகைப் பாடாத கவிஞர்கள் எண்ணிக்கையில் அடங்குவர். அவர்கள் வருணிக்கும் பாங்கும் அதற்கெனக் கூறும் உருவகமும் சேர்ந்து அக்காட்சியை நம் கண்முன்னே வந்து நிறுத்தும் அவ்வகையில் இரவின் அழகை வருணிக்கும் கவிஞரின் கவிதை,*

*"ஆயிரம் ஈக்கள்*
*மொய்க்கும் ஆசையில்*
*வானத்தட்டில்*
*இராத்திரிக் கிழவி*
*சுட்டு வைத்த*
*ஒற்றைத் தோசையில்"*[14]

*இக்கவிதையில் கவிஞர், இரவு பொழுதினை தோசை சுடும் கிழவியாகவும், வானத்தினை உண்ணும் தட்டாகவும், நிலவினை கிழவி சுட்டு வைத்த தோசையாகவும், நட்சத்திரங்களை, தோசையினை மொய்க்கும் ஈக்களாகவும் உருவகப்படுத்திக் கூறியுள்ளார். இக்கவிதை உருவகத்தின் மூலம் தன் கருத்தை வெளிப்படுத்துகிறது.*

*முடிவுரை*

*இத்தகைய கவிதைகளில் உவமை கவிதைக்குப் புறமாக வெளிப்பட்டு நிற்பவை அல்ல. அவை கவிதையின் அகவுறுப்புகளாகி, கவிதையுடன் இரண்டறச் சேர்ந்து ஒன்றி நிற்பவை. ஒரு சில கவிதைகளில் மிகுதியான உவமைகள் இடம்பெற்று அவை முழுக் கவிதையினையும் மிளிரச் செய்கின்றன. உவமைகள் கவிதையின் அக உறுப்புகளாக அமைந்துள்ளமையால் அவை இன்றியமையாததாக இருக்கின்றன. அனைத்துக் கவிஞர்களின் மூலமாகவும் கையாளப்பட்டு வரிகளில் நின்று கவிதையின் அழகை மேம்படுத்திக் காட்ட உவமையும் உருவகமும் ஓர் ஊன்றுகோலாக அமைகின்றன.*

*சான்றெண் விளக்கம்*

1. *சுப்பிரமணியன் ச.வே., தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.370.*
2. *மேலது., ப.370.*
3. *மேலது., ப.370.*
4. *சாம்ராஜ் யா. (தொ.ஆ), மீரா கவிதைகள், ப.33.*
5. *மேலது., ப.34.*
6. *மேலது., ப.36.*
7. *மேலது., ப.58.*
8. *சாம்ராஜ் யா. (தொ.ஆ), மீரா கவிதைகள், ப.75.*
9. *மேலது., ப.77.*
10. *மேலது., ப.78.*
11. *மேலது., ப.103.*
12. *சாம்ராஜ் யா. (தொ.ஆ), மீரா கவிதைகள், ப.80.*
13. *மேலது., ப.149*
14. *மீரா., குக்கூ, ப.264*

*துணை நூற்பட்டியல்*


1. *சாம்ராஜ் யா., மீரா கவிதைகள், சீதை பதிப்பகம், கௌரா புத்தக மையம், ஜெயின்ட் ஜான் சர்ச்சு வளாகம், திருச்சி, முதற்பதிப்பு 2012.*
2. *சுப்பிரமணியன் ச.வே., தொல்காப்பியம் பொருளதிகாரம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு 2008.*
3. *மீரா, குக்கூ, சீதை பதிப்பகம், கௌரா புத்தக மையம், ஜெயின்ட் ஜான் சர்ச்சு வளாகம், திருச்சி, முதற்பதிப்பு 2008.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********